**ஜூன் – 7**

**"கிறிஸ்து யேசுவுக்குள் நம்மைத் தமது நித்திய மகிமைக்கு அழைத்தவராயிருக்கிற சகல கிருபையும் பொருந்திய தேவன்தாமே கொஞ்சக்காலம் பாடநுபவிக்கிற உங்களைச் சீர்ப்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி, நிலை நிறுத்துவாராக."**

**- 1பேது 5 : 10.**

கிறிஸ்துவின் நல்ல போர் சேவகராகக் கஷ்டத்தை சகிப்பதன் (தீங்கனுபவிப்பதின்) மூலமாகவே விரும்பத்தக்க நிலைமையை அடையாலாம். அந்த விரும்பத்தக்க நிலைமையாவது, தீமையை எதிர்க்கப் பூரண தன்னடக்கமும், நம்பிக்கையையும், கிறிஸ்துவில் ஸ்தாபிக்கப்பட்ட நீடித்துள்ள இளைப்பாறுதலும், வாக்குத்தத்தம் கொண்ட அவருடைய வார்த்தையின் மூலமாகக் கிடைக்கிற நம்பிக்கையுமாம். வளர்ந்து முதிர்ச்சியடைந்த போது, இதுவே சந்தேகமின்றி எஜமானுடைய ஊழியத்தில் கிடைத்த அப்போஸ்தலனுடைய சொந்த அனுபவமாயிருந்தது. அப்படியே அது நம்முடையதாகவும் இருப்பதாக. ஒவ்வொரு கடந்த போகிற வருஷமும் பூரணத்தின் மகிமையான உச்சியின் சம்பவம் நம்மைக்கொண்டு ஏற்றினதாக இருப்பதாக..! **- Z ’95, 202 (R 1859).**

நாம் சுவிசேஷ யுகத்தின் அழைப்பின் சிலாக்கியத்தை உடையவர்களாயிருப்பது, தேவனுடைய கிருபை நமக்கு மிகவும் ஆச்சரியமான பிரகாசமாகக் காண்பிக்கப்பட்டவைகளில் ஒன்றாக இருக்கிறது. நமது அழைப்பை நிறைவேற்றுவதற்கு மிகவும் கஷ்டமான பாடுகளுக்குட்பட்டு, உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டியிருக்கிறதென்பதில் ஆச்சரியமில்லை. புது இருதயத்திலும், மனதிலும், சித்தத்திலும் செய்யப்படுகிற நம்முடைய அபிவிருத்தியில் இந்தப் பாடுகள் மூன்று காரியங்களை விளைவிக்கின்றன. தீமைக்கு எதிராக உள்ள நம்முடைய சரியான மனப்பாங்கிலும், அவைகள் நம்மைப் பலப்படுத்துகின்றன. கிறிஸ்தவ குணத்தின் பல்வேறு பாகங்களையும், தன்மைகளையும், அவைகள் சமப்படுத்துகின்றன. கடைசியாக அவைகள், அவைகளைப் பூரணமாக்கி அவைகள் நிரந்தரமாகப் பளிங்கைப் போலாக்குகின்றன. இவைகள் எல்லாம் தேவனுடைய ஆவி, வார்த்தை, பராமரிப்பு இவைகளின் வல்லமையின் மூலமாகவே கர்த்தரால் நிறைவேற்றப்படுகின்றன. **-P ’34, 95.**

**ஒத்து வாக்கியங்கள் :-** 1கொரி 1:9; 1தீமோ 6:12; சங் 30:5; ஏசா 54:8; மத் 5:12; ரோம 8:18,37; 1பேது 1:6; எபே 3:16; 6:10-17; கொலோ 1:11; 2தீமோ 2:1; 2தெச 2:17; 3:3; 1தெச 3:12,13; யாக் 5:8; 2பேது 1:12; ரோம 8:29; லூக் 6:40; எபே 4:12; எபி 13:20,21.

**கோபுரவாசிப்பு : Z ’95, 105 (R 1806)**

**வினாக்கள்:** இந்த வாரத்தில் இந்த வசனம் எனக்கு எவ்வாறு உதவியது? எப்படி? பலாபலன் என்ன?